O.S. No.24/2024

06.06.2025

**வா.சா. 2**

**திரு ராமச்சந்திரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

வாதி துரைமுருகன் கொரடாச்சேரியை சேர்ந்தவர். நான் சன்னாநல்லூர் கிராமத்தில் வசிக்கிறேன். 2004 ல் துரைமுருகன் முதன் முதலில் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றார். அவரை படிக்க வைத்து, வளர்த்து, செலவு செய்து அயல்நாட்டிற்கு அனுப்பியது அவரது தந்தையார் ராஜேந்திரன் என்றால் சரிதான். அவ்வாறு வெளிநாடு செல்வதற்கான செலவு தொகைகளை திரும்ப கொடுப்பதற்காகத்தான் என்னிடம் வாதி பணம் கொடுத்து ராஜேந்திரனுக்கு அனுப்பி வைப்பார். ராஜேந்திரன் கிரயம் பெற்ற சொத்துக்களில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் போடவில்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் துரைமுருகன் முதலீட்டில் ராஜேந்திரன் கிரயம் பெற்றதாக சொல்லப்படும் சொத்துக்கள் சம்மந்தமான விபரம் எதுவும் கிடையாது என்றால் சரி. 2004

லிருந்து துரைமுருகனுடன் வெளிநாட்டிற்கு சென்று வருவதால் அவருடன் நல்ல பழக்கம் என்றால் சரி. அந்த பழக்கத்தின் அடிப்படையில் துரைமுருகன் என்ன சொன்னாரோ அதை சாட்சியாக சொல்கிறேன் என்றால் ஆமாம். துரைமுருகனின் பணத்தில் ராஜேந்திரன் எந்த சொத்துக்களும் வாங்கவில்லை ராஜேந்திரன் சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்துக்கள்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.06.06 13:18:43 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

O.S. No.24/2024

06.06.2025

**வா.சா. 3**

**திரு ராவணன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

முதலாம் பிரதிவாதி என்னுடைய சகோதரி. வாதி என்னுடைய சகோதரியின் புதல்வன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள், வாதியினுடைய தண்ணீர் பம்ப் செட்டின் பூட்டை உடைத்து சேதப்படுத்தினார்கள் என கூறப்பட்டுள்ள நேரம், கிழமை குறிப்பிடவில்லை என்றால் சரி. சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்படும் நாளில் சம்பவ நிகழ்வு இடத்திற்கு உட்பட்ட காவல் நிலையத்தில் புகார் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பியதாக சொல்லப்படும் தேதி சம்பவ நிகழ்வு நாளிற்கு பின்னிட்ட தேதியில் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணம் இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம், அதை உறுதிபடுத்தும் விதமாக நான் உண்மைக்கு

புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. 1-ம் பிரதிவாதி கோப்பெருந்தேவி என்னுடைய சகோதரி. அவர் பிறந்த இடத்தில் உள்ள சொத்தை கேட்டதால் கோவம் கொண்டு இவ்வழக்கில் அவருக்கு எதிராக சாட்சி அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.06.06 13:18:51 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.